RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s312

OPEN ACCESS

# கரிப்புமணிகள் நாவல் காட்டும் உப்பளத் தொழிலாளர்களின் சமூகமாற்றம்

**மோ. ரூபா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-6000032, தமிழ்நாடு, இந்தியா.

# Social Changes of Salt Pan Workers in Karippu Manigal

**M. Roopa** [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai–600032, Tamil Nadu, India

* Corresponding Author: m.roopa1982@gmail.com

Received: 30-03-2021
Revised: 19-04-2022
Accepted: 01-05-2022
Published: 15-07-2022

Check for updates

## ABSTRACT

This Article deals with the novel "Karippu Manigal‟ which reflects the social changes in the lives of salt harvesters. The novel Karippu Manigal is the harrowing depiction of the lives of salt pan workers. Man's fundamental needs are Food, Clothing, and Shelter which are produced by the working class, but their lives halts at the margin. A tamil proverbs goes like this, "Food without salt is waste", which shows the immense use of salt in food. Though we enjoy the salt in food, we fail to know about the salt harvesters who produce that. Through this novel Rajam Krishnan portrays the appaling lives of workers in salt pans like their poor living condition, lower wages without proper standard income and their sufferings are not only constrained to money but also to physical illness such as young having grey hair at an early age, eye problems and many others. Author has also shown the other side of worker's suffering due to employers and contractors. Rajam Krishnan clearly demonstrates that, without striving earnestly, social changes ain't possible. The objective of this dissertation is to show that only a revolution against capitalism will serve as a root cause for the social changes in the lives of salt harvesters which is proved through the novel "Karippu Manigal".

**Keywords:** Karippu Manigal, Rajam Krishnan, Social Changes, Salt Harvesters

## முன்னுரை

மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளாக விளங்குபவை உணவு, உடை, உறையுள். இவற்றைப் பெற மனித சமுதாயம் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. "உழைப்பின்றேல ஊதியமில்லை" என்பது பழமொழி. ஆனால் பல தொழிலகங்களில் உழைப்பாளர்களின் உழைப்பிற்குத்தகுந்த ஊதியம் வழங்கப்படுவதில்லை. அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியற்றை நமக்களிக்கும் தொழிலாளிகளே உலகத்திற்கு முதன்மையானவர்கள் என்று சான்றோர் பெருமக்கள் கூறியுள்ளனர் (Yogiraj Vethathiri Maharishi, 1983). உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய வள்ளுவரும் உணவு தரும் உழவர்களை உலகத்திற்கு அச்சாணி என்று புகழ்ந்துள்ளார் (Parimelalhagar, 2002). முதலாளிகளுக்குப் பணம் மூலதனமாக இருப்பது போல தொழிலாளிகளுக்கு உழைப்பே மூலதனமாக இருக்கிறது. உழைப்பிலே இரண்டு வகையுண்டு ஒன்று உடலுழைப்பு. மற்றொன்று மூளை உழைப்பு. உடலை வருத்தி உழைத்து பெறும் ஊதியத்தைக் காட்டிலும், மூளையைப் பயன்படுத்தி உழைத்து பெறும் ஊதியம் அதிகமாக இருக்கிறது. உடலை

வருத்தி வியர்வை சிந்தி உழைக்கின்ற தொழிலாளர்கள் நிலை எப்போதும் வறுமையாகவே உள்ளது. "பலதொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்.

சான்றோர் பெருமக்கள் பாடினாலும் பாடுபடுகின்ற பாட்டாளி எப்போதும் வறுமைநிலையிலேயே வாடுகின்ற அவலநிலை நீடிக்கிறது (Yogiraj Vethathiri Maharishi, 1993). நாட்டில் பல தொழில்கள் இருந்தாலும் கடலைச்சார்ந்து நடைபெறுகின்ற தொழில்கள் மிகவும் கடினமானவை. ஆபத்தானவை. சங்ககாலத்திலிருந்து இக்காலம் வரை கடல் சார் தொழில் செய்கின்ற மக்கள் அதிக அளவு பாடுபட வேண்டியுள்ள நிலைமையை இலக்கியங்கள் வாயிலாக அறிவோம். சமகால கவிஞர்கள் பலர் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதுவதில் அதிக அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளனர். அவர்களில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் தொழிலாளிகளின் நிலைமையை நம் கண்முன்னே எடுத்துக் காட்டுவதில் திறம்படைத்தவர். உப்பளத் தொழிலாளர்களின் வாழ் வியில் நிலை குறித்து அவர் எழுதிய "கரிப்புமணிகள்" என்னும் நாவல் இலக்கியச் சிந்தனைப் பரிசு பெற்ற சமூக நாவல் ஆகும். இந்த நாவலில் உப்பளத் தொழிலாளர்கள் படும் இன்னல்கள், அவர்களுடைய வறுமைநிலை, முதலாளித்துவ ஆதிக்க நிலையை எதிர்த்து போராடும் தன்மை என அவர்களுடைய சமூகமாற்றத்தினை செவ்வனே விளக்கியுள்ளார் ஆசிரியர். எனவே இந்நாவலின் வழி உப்பளத் தொழிலாளர்களின் படிப்படியான சமூக மாற்றத்தை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## உப்பளத்தொழிலாளர்களின் வறுமைநிலை

முதலாளித்துவ சமூகம் எப்போதும் இலாபம் ஒன்றையே பெரிதாக எண்ணி செயல்படும். தொழிலாளர்களின் உடல் உழைப்பையோ, அவர்களின் மனஉலைச்சலையோ கருத்தில் கொள்வதில்லை. தங்களுக்கு வேலை ஆகவேண்டுமென்றால் கூலி அதிகமாக சொல்லி வேலையாட்களை அழைத்து வந்து, பின் குறைவான கூலி கொடுப்பர். இதனை, "ஐந்து ரூபாய் கூலி பேசிவிட்டு மூன்று ரூபாய் கொடுத்தாலும் மீறிச் சென்று விட இயலாமல் அவர்கள் பொருளாதார நிலை குழிபறித்து வைத்திருக்கிறது" என்ற ராஜம் கிருஷ்ணன் வரிகளால் அறியலாம். மேலும்

"அந்த அற்பக் கூலியினால் அவர்கள் பசித்தீயை முற்றிலும் அவித்து வறட்சியைத் தீர்க்க முடிவதில்லை." என்று ஆசிரியர் குறிப்பிடுவதால் தொழிலாளிகளின் வறுமைநிலையும், அவர்களுடைய பசிக் கொடுமையும் புலப்படுகிறது. உப்பளத் தொழிலாளர்களுடைய வீட்டில் இருக்கும் நிலை அவர்களுடைய வறுமையை மேலும் எடுத்துரைக்கிறது.

"இங்கு அடுப்புங் கூட இடிந்திருக்கிறது. நீர்பானையும் கூடக் கழுத்தில் ஓட்டையாக இருக்கிறது. துணியைச் சுருட்டி அடைத்திருக்கிறார்கள். பித்தளை என்பது மாதிரிக்குக் கூடக் கிடையாது. அலுமினியம் குண்டான் ஒன்றைத் தவிர உருப்படியாக அப்பச்சியும் சின்னம்மாவும் சாப்பாடு கொண்டு செல்லும் அலுமியம் தூக்குப் பாத்திரம் தாம் இருக்கின்றன. தண்ணீர் குடிக்கக் கூட பித்தளையிலோ, வெள்ளோட்டிலோ ஒரு கிளாசு இல்லை. பிளாஸ்டிக் தம்ளர்கள் இரண்டு தாம் அழுக்கேறிக் கிடக்கின்றன. வாளியும் ஒழுகிறது. துணிக்கந்தையால் அடைத்திருக்கிறார்கள்."

என்று ஆசிரியர் உப்பளத் தொழிலாளர்களின் வறுமைநிலையை எடுத்தியம்புகிறார். பித்தளை மாதிரிக்குக் கூட இல்லையென்று சொல்லும் போது அவர்களுடைய வறுமைநிலை கண்முன்னே தெரிகிறது. இந்நிலையை காணும் போது,

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்: வெறுஞ்

சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்"

என்ற பாரதியின் வரிகளே நினைவுக்கு வருகிறது (Kulanthaisamy, 1982).

## தொழிலாளர்களின் உடல்நிலை

உப்பளத்தில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு அதன் வெப்பத்தன்மை தாங்கமாட்டாமல் பல நோய்கள் வருவதுண்டு. இதனை, "இந்த உப்பளத்துச் சூடு தா அக்கினியாட்டமா கண்ணுக்கு ஆவுறதில்லே" என்று ஆசிரியர் கூறுவதின் வாயிலாக உப்பளத் தொழிலாளர்கள் கண் பாதிக்கப்படுவது புலப்படுகிறது. மேலும்,

"ஆணானாலும் பெண்ணானாலும் நேர்ப்பார்வை பார்க்கமாட்டார்கள். கீழப்பார்வை, அல்லது சரித்துக் கொண்டு பார்க்கும் கோணல் பார்வையால் தன் உலகைக் காண வேண்டும் முடியில் உப்புக் காரம் ஏறி ஏறிக் கருமையும் கணமும் தேய்ந்து நைந்துவிட, முப்பது முப்பத்தைந்துப் பருவத்திலேயே முடி பதம் பண்ணிய தேங்காய்ப் பஞ்சு போலாகிவிடுகிறது."

என்று ஆசிரியர் கூறுவதால் உப்பளத் தொழிலாளர்களுக்கு இளமையிலேயே முடி நரைத்து முதுமை தோற்றம் பெறும் அவலத்தைக் காண முடிகிறது. இங்ஙனம் இளமையிலே தினம் தினம் பொழுதை கரைத்து முதுமையை நாடும் இவர்களின் அவல நிலையை,

"பெரிய பெரிய கனவுடன்

தினம் தினம் கரைகிறது பொழுது

தொழிலாளிக்கு......"

என்ற கவிதை புலப்படுத்துகிறது (Rajam Krishnan, 2003).

## முதலாளித்துவம்

முதலாளிகள் தொழிலாளிகளின் உழைப்பை அதிக அளவு சுரண்டுவதோடு மட்டுமல்லாமல் அதற்கேற்ற கூலியும் தருவதில்லை. சில இடங்களில் முதலாளிகள் கூலியை சரியாகத் தந்தாலும் இடையே இந்த ஒப்பந்தக்காரர்கள் பணத்தை ஏப்பம் விட்டுவிடுகின்றனர். இதனை தன்னுடைய நாவலில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

"அளத்துல ஒருத்தி பிள்ள பெறுறவரய்க்கும் ஏன் வேல செய்யிதா? மனுசாபிமானத் தோட பேறு காலத்துக்கு அலவன்சு மாதிரி ஏதாவது கொடுக்கிறாவளா? இவங்களுக்கு அதனாலே கொறஞ்சிடுமா? உப்பு நட்டம் வந்தா மீனுல லாபம் வரும். மிசின் போட்டு வாங்கிவிட்டிருக்கா. மீனுல நட்டம் வந்தா காடுகரை வச்சிருக்கா. காபித் தோட்டம் வாங்கறா பணம் பணத்தோட சேரச் சேர சுயநலம் அதிகமாகி மனிசாபிமானம் போயிடும் போல இருக்கு. ஒரு கூலின்னு நிர்ணயம் செஞ்சா, எல்லா அளக்காரனும் அதெக் குடுக்கிறாவளா? எடயில கண்ட்ராக்டுன்றா. ஆடுமாடுங்கள சப்ள பண்ணுறாப்பல தொலாளிங்களை வளீச்சிட்டுப் பணம் பண்றா. மொதலாளிக்கும் தொழிலாளிக்கும் நடுவ இவெ கமிசன் இதுக்கு சட்டம் கெடயாது."

என்ற ஆசிரியரின் கூற்று முதலாளிகளின் தொழில் இலாபத்தையும், அதே சமயத்தில் தொழிலாளிகள் சுரண்டப்படுவதையும் விளக்குவதாய் அமைந்துள்ளது. சில உப்பளங்களில் தொழிலாளர்கள் அடிமைகளைப் போல நடத்தப்படுவதை, "நிர்ணயக்கூலி ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமில்லை என்றாலும் ஓரளவு அங்கெல்லாம் நிர்ணயக் கூலி நடைமுறைக்கு வந்திருக்கிறது. இங்கோ முதலாளி கணக்கில் நாள் கணக்கு நிர்ணயக்கூலி, மாசச் சம்பளம் என்று பெறுபவர் சொற்பமானவர். பெரும்பாலான தொழிலாளர், காண்ட்ராக்ட் என்ற முறையில் நிர்ணயக் கூலிக்கும் குறைவான கூலிக்கு அடிமைப்படுத்தப் பெற்றிருக்கின்றனர்." என்ற ஆசிரியர் கூற்றால் அறியலாம்.

உப்பளங்களில் செய்கின்ற வேலைக்குத்தக்க கூலி கிடைக்கவில்லையென்றாலும் அங்கு வேலை செய்யும் பெண்பிள்ளைகளும் மரியாதைக்குறைவாக நடத்தப் படுவது வழக்கமாகியிருக்கிறது என்பதை, "நீங்க நாயமா, இங்க நடக்கிற அக்கிரமங்களை விசரிக்கணும்னு நான் சொல்றேன். இங்கே, பொண்டுவ, வாயில்லாப் பூச்சிகளாச் சீரளியிறா, இவனுக்கு எணங்கலேன்னா அவிய கூலியில மண்ணடிக்கிறா,

நீங்க இங்க வேல செய்யிற பொம்பிளகளைக் கூட்டி விசாரிக்கணும்." என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து புலப்படுகிறது. இவர்களைப் போல ஆட்களைக் கண்டால்,

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த

நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்ற பாரதியின் வரிகள் நினைவுக்கு வருகின்றன (Periyasaamy Thooran, 1982).

முதலாளிகளை எதிர்த்து யாரேனும் குரல் கொடுத்தால் அவர்களுக்குச் சம்பளக் குறைப்பு, வேலைச்சுமை அதிகம் போன்ற இன்னல்கள் தரப்படும். சில சமயங்களில் வேலையே பறி போகக் கூடிய நிலைமையும் ஏற்படும். இத்தகைய முதலாளித்துவ அதிகார நிலைமையை, "ராமசாமிக்கு மறுநாளே வேலை சீட்டுக் கிழிக்கப்பட்டது. தங்கராசு அவனிடம் வந்து, அத்தனை தேதி வரையிலுமான காசைக் கொடுத்துக் கணக்குத் தீர்த்துவிட்டான். கையெழுத் து ஒன்றைப் போட்டுவிட்டுச் சம்பளத்தை - ஐம்பத் தெட்டு ரூபாய் சொச்சத்தை எண்ணிப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று" என்று பதிவு செய்துள்ளார் ஆசிரியர். முதலாளிகளுக்குச் சார்பாக பேசி அவர்களுக்குத் துணையாக இருந்தால் மட்டுமே வேலையில் பிழைக்க முடியும். அவர்களை எதிர்த்து கேள்வி கேட்டால் இந்த நிலைமை தான் எல்லோருக்கும்.

"பணக்காரர் வயிறுண்டு! தொழிலாளர்

நஞ்சுண்டு சாகட்டுமே!

நற்காற்று, வானம், நீர், அனல் பொது அடைந்ததால்

நன்செயும் பொதுவே எனத்

தலையற்ற முண்டங்கள் சொன்னால் பெரும்பெரும்

தலையெலாம் உம்மில் உண்டு!

தாழ்ந்தவர்க் கேதுண்டு, கால்செருப்பேஉண்டு"

முதலாளித்துவ சமுதாயத்திற்கான அறிவுபூர்வமான வாதங்களை முன்வைக்க மூளையைக் கசக்கி முழுநேரம் அவர்களுக்குத் துணைபோக அறிவு ஜீவிகள் பலர் இருக்கிறார்கள் எனப் பதைப் பெரும்பெரும் தலைகள் உம்மிடம் உண்டு என்றும் அவர்களுக்குப் பதில் சொல்லத் தலையற்ற முண்டங்களான தொழிலாளர்களிடம் கால் செருப்பைத் தவிர வேறொன்றுமில்லையென்றும் சொல்லிக் கவிஞர் சின நகைபூப்பதை இக்கவிதையில் காணலாம் (Maruthanayagam, 2003). தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுப்பவர் யாருமில்லை என்பதை இக்கவிதையின் வாயிலாக அறிய முடிகிறது.

## தொழிலாளர் போராட்டம்

பொறுமைக்கும் எல்லை உண்டு என்பார்கள். உப்பளத் தொழிலாளர்கள் எவ்வளவு காலம் தான் நிர்ணயக்கூலிக்கு வேலை செய்யாமல் குறைவான கூலிக்கு வேலை செய்வது. அக்கிரமக்காரர்களைக் கண்டு வெகுண்டு எழும் காலம் வந்துவிட்டது. போராட்டம் இன்றேல் மாற்றம் இல்லை. ஒரு சமுதாயம் சுதந்திரம் பெற வேண்டுமென்றால் போராடினால் தான் பெற முடியும். அழுகின்ற குழந்தைக்கே பால் கிடைக்கும் என்பார்கள். அதுபோல போராடினால் மட்டுமே நம் தேவைகள் பூர்த்தியாகும். அங்ஙனமே கரிப்பு மணிகள் நாவலில் ஆசிரியர் ராஜம்கிருஷ்ணன் உப்பளத் தொழிலாளிகளின் துன்பங்களை, அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களை, முதலாளித்துவ அடக்குமுறைகளைப் பற்றி எழுதினாலும் இறுதியில் அவர்கள் வெகுண்டெழுந்து போராடுவதைப் பதிவு செய்கிறார்.

"பனஞ்சோலை அளத் தொழிலாளரே! ஒன்று சேருங்கள்! எட்டுமணி நேர வேலைக்கேற்ற ஊதியம் பதிவு பெறும் உரிமை. வாராந்திர ஓய்வுநாளைய ஊதியம் - இவை அனைத்தும் உங்கள் உரிமை! தாய்மார்களே! உங்கள் சக்தியைச் சிதற விடாதிர்கள்! ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான

கூலி" என்பன போன்ற வாசகங்கள் அச்சிடப் பெற்ற துண்டுப் பிரசுரங்கள் எங்கிருந்து பிறந்தது எப்படி வந்ததென்று புலப்படாமல் தொழிலாளரின் உள்ளுணர்வைச் சீண்டி விடுகின்றன."

இத்தனை காலம் பொறுத்திருந்திருந்த மக்கள் வெகுண்டெழுந்த காட்சியை ஆசிரியர் அப்படியே நம் கண்முன்னே கொண்டு வருகிறார்.

"உப்பளத் தொழிலாளர் சங்கம் வாழ்க! எங்களுக்கு நியாயம் வேண்டும்! எங்களை ஆலைச் சட்டத்துக்கு உட்பட்ட பதிவுத் தொழிலாளியாக்குங்கள்! நீதி கொல்லாதீர்! ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவேலை சமகூலி" என்ற முழக்கங்கள் எங்கும் முழங்கிக் கொண்டே இருக்கிறது. இப்படி போராடினால் முதலாளித்துவ சமூகம் சும்மா விடுமா?. அவர்கள் அனைவரையும் வேலையிலிருந்து தூக்கிவிட்டு புது வேலையாட்களை அழைத்துவந்தனர். ஆனால் அதைக் கண்டு அங்கு உள்ள மக்கள் வெகுண்டெழுந்து ஒரு சமுதாயப் புரட்சியை வெடிக்கச் செய்கின்றனர்.

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்

உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்

ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி

ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

என்ற பாரதிதாசன் வரிகளுக்கேற்ப ஏழைகளெல்லாம் கொதித்தெழுந்து விட்டால் அனைத்தும் ஒன்றுபட்டுவிடும் என்பதை உப்பளத் தொழிலாளர்களின் போராட்டம் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துகிறார் (Maruthanayagam, 2003).

போராட்டம் என்று வந்து விட்டால் ஆண்களும் பெண்களும் ஒன்றிணைந்து போராடினால் தான் வெற்றி. உப்பளத்தில் தங்களுக்குப் பதில் வேறொரு ஆட்களை அழைத்து வந்ததை பார்த்த உடனேயே செங்கமலத்தாச்சி பூமி வெடிப்பது போல் கிளம்பியதை ஆசிரியர் சமூக மாற்றத்திற்கான அடிக்கல்லாக நாட்டுகிறார்.

"ஒரு கணம் அவள் சக்தியைத் திரட்டிக் கொள்வது போல் நிச்சலனமாக நிற்கிறாள். மறுகணம் இடுப்பிலிருக்கும் சாவியைக் கையில் எடுக்கிறாள்." அதைப் பொன்னாச்சியிடம் கொடுத்து விட்டு மேலும் வேகமாகப் புறப்படுகிறாள்.

"ஐயா எல்லாம் வாரும்! ஏல்லாம் வாருங்க! பனஞ்சோல அளத்துல ஆளுவளக் கொண்டிட்டு வாராவளாம்! வாங்க! அளத்துகாரவுங்க வாங்க!

அவள் உப்பளத் தொழிலாளருக்குக் குரல் கொடுத்துக் கொண்டு ஓடுகிறாள். ஒரு தீப்பந்தம் புயற் காற்றுச் சூறாவளியில் பறந்து செல்வது போல் மணல் தெரியில் கம்பும் கையுமாக ஓடுகிறாள்.

அளத்துப் பொண்டுவள்ளம் வாங்க! வாங்கடீ!"

என்று ஆச்சி வெகுண்டு கிளம்பியதை அனைவரும் பார்த்து வியந்தனர். சாது மிரண்டால் காடு கொள்ளாது. என்பார்கள் அதுபோல இதுவரைக்கும் பொறுமையாக இருந்த பெண்கள் கொதித்தெழுவதைப் பார்த்து அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்தனர். அவள் பேசுகின்ற ஆவேசமான பேச்சுகள் சும்மா இருப்பவர்களையும் வெகுண்டெழச் செய்யும் என்பதை, "ஆளுளைக் கொண்டிட்டா வாரிய? வந்தது, வாரது ரெண்டில ஒண்ணு. பொறுத்திருக்கும் பூமி தேவியும் வெடிச்சிடுவால...! நாசகாலம் ஒங்கக்கா, எங்கக்கான்னு பாத்திடுவம்! நூகற்பு பெசகிட்டேன்னு சாபம் போட்டு மவனவிட்டு ஆத்தாள வெட்டச் சொன்னா. அந்த ஆத்தாதா ஆங்காரத் தெய்வமானா ஆங்காரத் தெய்வம்! எலே வாங்க! பனஞ்சோல அளத்துல ஆளெடுக்கிறாவளாம்! தடுக்க வாங்க! வாங்க…" என்று தன் சமுதாய மாற்றத்திற்கு போராடும் அந்த ஆச்சியின் மனப்போராட்டம் அந்த சமூகத்தின் விடிவெள்ளியாய் இருக்கும் என்பது திண்ணம்

## முடிவுரை

ராஜம்கிருஷ்ணன் அவர்கள் கரிப்புமணிகள் நாவல் வழி உப்பளத் தொழிலாளர்களின் சமூக நிலையைப் பதிவு செய்துள்ளார். உப்பளத் தொழிலாளர்களின் வறுமைநிலை, மூன்று வேலையும் உணவு உண்ண முடியாத நிலை, நிர்ணயக் கூலி அல்லாது குறைவான கூலிக்கு வேலை செய்தல் போன்றவற்றை சமூகத்திற்கு அழகுற விளக்கியுள்ளமை இவ்வாய்வுக் கட்டுரையில் புலப்படுகிறது. உப்பு வெண்மை நிறமாக இருந்தாலும் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை கருமைப்படலமாக இருப்பதை ஆசிரியர் விளக்கியுள்ளமை அறிய முடிகிறது. சிறுவயதிலிலேயே நரை மூப்பு, கண் பார்வை குறைபாடு போன்ற உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டு அவதியுறுவதை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளமையை அறிய முடிகிறது. நாட்டின் சுதந்திரத்திற்குப் போராட்டமே அச்சாணியாக விளங்கியது போல உப்பளத் தொழிலாளர்களின் சமூக மாற்றத்திற்கும் போராட்டமே ஆணிவேர் என்பதை உணர்த்தி பெண்களும் போராட்டக் களத்தில் வெகுண்டெழுவதையும், ஆண்களும் பெண்களும் சமம் என்பதை விளக்கியுள்ளமையும் இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

## References


Kulanthaisamy, V.S., (1990) Bharathin Ariviyal Paarvai, Bharathi Pathippagam, Chennai, India.

Maruthanayagam, P., Ponnadiyaan, (2003) Bharathidasanum Pothuvudaimai thathuvavum, Tamil University, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Periyasaamy Thooran, M.P., (1982) Bharathiyar Noolgal Oru Thiranaiaavu, Vanathi Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2003) Karippu manikal, Thagam Pathippagam, Chennai, India.

Yogiraj Vethathiri Maharishi, (1983) Makkolamai Vilaintha Mathivirunthu, Vethathiri Maharishi Pathippagam, Erode, India.

Yogiraj Vethathiri Maharishi, (1993) Gnnamum Valvum, Vethathiri Maharishi Pathippagam, Erode, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License